**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF MR.M.KOWSHIK DHEV COLOUR GRANITE QUARRY, LEASE OVER AN EXTENT OF 1.98.0 HA LOCATED AT S.F.NO. 333 (PART), SHOOLAMALAI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 31.07.2024 AT 11.00 AM AT M/S. SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, THIRUVANAMALLI MAIN ROAD, ANCHOORE VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S. Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A.Vinodhini | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. M.Kowshik Dhev | : | Proprietor Mr.M.Kowshik Dhev Colour Granite Quarry |
| 5 | Thiru. M. Sheik Nawas | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem |
| | Public | : | 68 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials and all the general public and project proponent who have attended the public hearing for the proposed Mr.M.Kowshik Dhev Colour Granite Quarry Lease over an Extent of

1.98.0 Ha Located at S.F.No. 333 (Part), Shoolamalai Village, Bargur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 25.06.2024 and bit notices regarding public hearing was issued to the public of Soolamalai Village, Malakottai Village, Kumarankottai Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Colour Granite Quarryproject through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Sheik Nawas, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem of the proposed Colour Granite Quarryproject has made presentation about the proposed Colour Granite Quarryproject to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Colour Granite Quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Mutthachari, Iguntham Pudur:**

Thiru. Mutthachari has informed that, they used to go to Bangalore for work because then, the Krishnagiri was economically backward. At present, industrial growth is increasing due to the fact that more factories are located here and establishment of this quarry here will provide additional benefit. The Quarry management is already experienced in their quarry business. Therefore, we hope that the proposed quarry will be operated in a safe and environmentally friendly manner. Therefore, he requested permission for this quarry project.

**2. Thiru. Karthik, Anchoore:**

Thiru. Karthik has said that, the establishment of this quarry will provide employment to local tipper and excavator owners. He also said that the labourers who are looking for drilling, compressor operator work will get jobs locally. Therefore, he welcomes the proposed project.

**3. Thiru. Kunal, Thogarapalli:**

Thiru. Kunal has said that, Quarry management is already experienced in their quarry business. Therefore, we hope that the proposed quarry will be operated in a safe and environmentally friendly manner. Therefore, we are giving full support to this quarry project.

**4. Tmt. Priya, Jagadevi Village:**

Tmt.Priya has said that, at present there is no job opportunity for them in the village and by establishing this quarry, our villagers will get jobs, so she welcomes this project.

**5. Thiru. Venugopal, Kettur Village:**

Thiru.Venugopal has said that, the school and road in our village will be affected due to the quarry project also there will be hindrance for trespassing of school children. Therefore, he said that we are not interested in this quarry project and requested that permission for this project should be given only after consulting the local people.

**6. Thiru. Balaji, Jagadevi Village:**

Thiru. Balaji has said that, the establishment of this quarry would provide direct and indirect employment opportunities to the local people. Already, the existing quarry located near our village has provided employment opportunities to local workers including vehicle drivers. He also asked for assistance from the quarry management through their Social Responsibility Fund to help the local school. Finally, he welcomed the quarry project.

**7. Thiru. Mathialazgan, Korudur, Anchoore Village:**

Thiru. Mathialazgan has said that, establishment of this quarry will provide direct and indirect employment opportunities to the local people, also requested them to help the local school. Further, he expressed his interest towards the establishment of proposed quarry project.

**8. Tmt. Lakshmipriya, Vice President, Anchoore Village Panchyat:**

Tmt. Lakshmipriya has said that, the establishment of this quarry will provide employment opportunities to the local people and it is a people's welfare project. She also requested that, the village should be helped and the local school will be developed by the quarry management. Finally, she said that she has no objection to the proposed quarry project and welcomes the same.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 7 number of petitions were received on the proposed Mr.M.Kowshik Dhev Colour Granite Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there are 2 written representations and 5 Email representations were received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Colour Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Revenue Divisional Officer**<br>**Krishnagiri**<br>14/19 | **District Collector**<br>**Krishnagiri**<br>14/19 |

**தி/ள். M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரி,ச. எண். 333 (பகுதி),சூலாமலை கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வண்ண கிரானைட் குவாரி 1.98.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 31.07.2024 அன்று திருவண்ணமாலை மெயின் ரோடு, அஞ்சூர் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஷ்வரி மஹாலில் முற்பகல் 11.00 மணி முதல் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. M. கௌசிக்தேவ் | : | உரிமையாளர் தி/ள். M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரி |
| 5 | திரு.M.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஜியோஎக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 68 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரிக்குசுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் திரு. M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரியின்உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 25.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார்.மேலும், சூலாமலைகிராமம், மேலகோட்டைகிராமம், குமரன்கோட்டைகிராமம்ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ளவண்ண கிரானைட் குவாரியின்உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கலர் கிரானைட் குவாரிதிட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும்வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு. M. கௌசிக்தேவ் வண்ண

கிரானைட் குவாரியின் உரிமையாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரியின் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோஎக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம்அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு.முத்தாச்சாரி,ஐகுந்தம் புதூர்:**

திரு. முத்தாச்சாரிஅவர்கள்,எங்கள் ஊரானது பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்த காரணத்தினால் நாங்கள் பெங்களூர் சென்று வேலை செய்து வந்தோம், தற்பொழுது தொழிற்சாலைகள் அதிகளவில் இங்கு அமைந்துள்ள காரணத்தினால் தொழில் வளம் பெருகி உள்ளது. இக்குவாரி, இங்கு அமைவது கூடுதல் சிறப்பாக

அமையும். இக்குவாரி நிறுவனத்தினர் ஏற்கனவே, குவாரி நடத்திய அனுபவம் வாய்ந்தவர்கள். எனவே, உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரியை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி பாதுகாப்புடன் நடத்துவார்கள் என நம்புகிறோம். எனவே, இக் குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**2. திரு.கார்த்திக், அஞ்சூர்:**

திரு. கார்த்திக்அவர்கள்,இக்குவாரி அமைவதால் உள்ளூரில் உள்ள டிப்பர் மற்றும் தோண்டு இயந்திரம் வைத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று கூறினார். மேலும், வெளியூர் சென்று DRILLING, COMPRESSORவேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உள்ளூரிலே வேலை கிடைக்கும் என்று கூறினார். எனவே, இக்குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

**3. திரு. குணால், தொகரப்பள்ளி கிராமம்:**

திரு. குணால்அவர்கள்,இக்குவாரி நிறுவனத்தினர், ஏற்கனவே குவாரி நடத்திய அனுபவம் வாய்ந்தவர்கள். எனவே, இக்குவாரியை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி பாதுகாப்புடன் நடத்துவார்கள் என நம்புகிறோம். எனவே, இக் குவாரி திட்டத்திற்கு நாங்கள் முழுமையான ஆதரவு வழங்குவதாக கூறினார்.

**4. திருமதி. பிரியா, ஜெகதேவி கிராமம்:**

திருமதி. பிரியாஅவர்கள்,தற்பொழுது தங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்றும் இக்குவாரி அமைவதன் மூலம் எங்கள் கிராம மக்குளுக்கு வேலை கிடைக்கும் என்றும் அதனால் இத்திட்டத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

**5. திரு. வேணுகோபால், கெட்டூர்:**

திரு. வேணுகோபால் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதனால் எங்கள் ஊரில் அமைந்துள்ள பள்ளி, சாலை ஆகியவை பாதிப்படையும். மேலும், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அதிகளவில் இடையூறு ஏற்படும் என்று கூறினார்.

எனவே, இக்குவாரி திட்டம் அமைவதில் எங்களுக்கு விருப்பம் இல்லையென்றும், உள்ளூர் மக்களிடம் கலந்து ஆலோசித்த பிறகே, குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**6. திரு. பாலாஜி, ஜெகதேவிகிராமம்:**

திரு. பாலாஜி அவர்கள், இக்குவாரி அமைவதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறினார். ஏற்கனவே, எங்கள் ஊருக்கு அருகில் குவாரி அமைக்கப்பட்டதால் வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. மேலும், குவாரியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து உள்ளூரில் அமைந்துள்ள பள்ளிக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இறுதியாக, தான் இந்த குவாரி திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**7. திரு. மதியழகன், கொளூடுர், அஞ்சூர் கிராமம்:**

திரு. மதியழகன் அவர்கள், இக்குவாரி அமைவதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறினார் மற்றும் உள்ளூரில் உள்ள பள்ளிக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார். இக்குவாரி திட்டம் அமைவதில் தங்களுக்கு விருப்பம் என தெரிவித்தார்.

**8. திருமதி. லட்சுமிபிரியா, அஞ்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்:**

திருமதி. லட்சுமிபிரியா அவர்கள், இக்குவாரி அமைவதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும், இத்திட்டம் மக்களுக்கு ஒரு நலத்திட்டம் என கூறினார். மேலும், இக்குவாரியின் சார்பாக ஊருக்கு உதவ வேண்டும் எனவும் பள்ளிக்கு வழித்தடம் அமைத்திட உதவ வேண்டுமென கேட்டுக்கொண்டார். இறுதியாக, தான் இந்த குவாரி திட்டத்தை வரவேற்பதாகவும், இக்குவாரி திட்டத்திற்கு ஆட்சேபனை இல்லையென்றும் தெரிவித்தார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். M. கௌசிக்தேவ் வண்ண கிரானைட் குவாரியின் திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 7 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். M. கௌசிக்தேவ் உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 2 மனுக்களும், மின்னஞ்சல் மூலமாக 5 மனுக்களும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் பெறப்பட்டன.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | வருவாய் கோட்டாட்சியர்<br>கிருஷ்ணகிரி | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |